# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



159
225

தனி அலுவலர் விப்பேடு ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.வே.ராஜ்குமார்

ந.க.எண்.1874/2019/ஆ3

நாள்.15.07.2019

பொருள் - அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - விப்பேடு ஊராட்சி - கீழ்கதிர்பூர் மதுரா குண்டுகுளம் கிராமம் - சர்வே எண்.229/2, 229/3, 229/4A, 229/4C, 230/2, 230/3, 231/1, 231/2, 231/3, 232/1, 232/2, 232/3, 233/2, 233/3, 233/4, 233/5, 235/1, 235/2, 235/3-ல் மொத்த பரப்பளவு 15.29 ஏக்கர் (அ) 61876 ச.மீ இடத்தில் அமைந்துள்ள **"Green Park Avenue"** என பெயரிடப்பட்டுள்ள குடியிருப்பு வீட்டுமனைபிரிவு (Lay Out) வரைபடத்திற்கு **ம.வ./ந.ஊ.இ.எண்.21/2019** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வீட்டு மனைகள் விற்பனை செய்ய விப்பேடு கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை -
1. முதன்மை செயலாளர் / நகர் ஊரமைப்பு ஆணையர் (மு.கூ.பொ), அண்ணா சாலை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்.24017/2018/எல் ஏ1 நாள்.21.03.2019
2. விப்பேடு ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.94 நாள்.03.06.2019
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.24017/2018/எல்.ஏ.1 நாள்.18.06.2019
4. மனுதாரர் திரு.A.செந்தில் குமார் மற்றும் மூவர், No.610, சரவணா நகர், வேளிங்கப்பட்டறை, காஞ்சிபுரம் 631 502

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், விப்பேடு ஊராட்சி, கீழ்கதிர்பூர் மதுரா குண்டுகுளம் கிராமம், சர்வே எண்.229/2, 229/3, 229/4A, 229/4C, 230/2, 230/3, 231/1, 231/2, 231/3, 232/1, 232/2, 232/3, 233/2, 233/3, 233/4, 233/5, 235/1, 235/2, 235/3-ல் மொத்த பரப்பளவு 15.29 ஏக்கர் (அ) 61876 ச.மீ இடத்தில் அமைந்துள்ள **"Green Park Avenue"** என பெயரிடப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான சாலைகள் மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் **(Road Pattern Lay Out)** பார்வை 1-ல் காணும் முதன்மை செயலாளர் / நகர் ஊரமைப்பு ஆணையர் (மு.கூ.பொ), அண்ணா சாலை, சென்னை அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட சாலை அமைப்பு *Blue Print*-ல் வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி, சாலைகள் எண்ணிக்கை 27, பூங்கா **I & II** மற்றும் பசுமை புல்வெளி பூங்கா **I & II** ஆகிய இடங்கள் விப்பேடு கிராம ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.2359/2019 நாள்.25.04.2019-ன்படி பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப ஒப்புதல் (Technical Santion) வழங்கப்பட்ட இம்மனைபிரிவு வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.இ.எண்.**21/2019** என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கபட்டுள்ளதாலும், கிராம ஊராட்சி வளர்ச்சி கட்டணமாக 92,814/- (ரூபாய் தொண்ணூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று பதினான்கு மட்டும்) பல்வகை இரசீது எண்.42915 நாள்.12.07.2019-ன்படி பெறப்பட்டுள்ளதாலும், **"Green Park Avenue"** என பெயரிடப்பட்டுள்ள மனைப்பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனைகள் எண்ணிக்கை **357 (EWS மனைகள் உள்பட)** மற்றும் கடை மனை **4 (Shop)** ஆகிய வீட்டு மனைகள் விற்பனை செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு விப்பேடு கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

//நிபந்தனைகள்//

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.

- நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

- நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். ந.க.எண்.24017/2018/எல்.ஏ.1 நாள்.18.06.2019-ன்படி செயல்முறை கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது மனுதாரர் பின்பற்றவேண்டும்.

- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள்மீது குற்றிவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- 9.00 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்படவேண்டும்.

- EWS மனைகள் 12 to 78, 191 to 222 ஆகியவை பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

P. Dhanasekaran

- மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடை மனைகள் (Shop) அதற்குரிய வணிக உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

தனி அலுவலர்
விப்பேடு ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திரு.A.செந்தில் குமார் மற்றும் மூவர்,
No.610, சரவணா நகர்,
வேளிங்கப்பட்டறை, காஞ்சிபுரம் 631 502

15/07/19

நகல் - நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - சார்பதிவாளர், Joint II காஞ்சிபுரம் அவர்களுக்கு மனைகள் பத்திர பதிவு செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் - ஊராட்சி செயலர், விப்பேடு ஊராட்சி

அனுப்புநர்

சி.சந்திரசேகரன், B.E.M.T.P.
உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ),
காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்,
பிளாட் எண்.1, வள்ளலார் தெரு,
மின் நகர் (ஸ்டேடியம் பின்புறம்)
காஞ்சிபுரம்.
msklpa3@gmail.com.
Office Phone No:044-27227937.

பெறுநர்

தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்,
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்,
காஞ்சிபுரம்.

ந.க.எண்.4179/2018/காஉதிரு — நாள்.12.11.2019

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - காஞ்சிபரம் உள்ளூர் திட்டக் குழும அலுவலகம் - காஞ்சிபுரம் - காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - கீழ்கதிர்பூர் மதுரா குண்டுகுளம் கிராமம், சர்வே எண். 229/2,3,4A,4C, 230/2,3, 231/1,2,3, 232/1,2,3, 233/2,3,4,5, 235/1,2,3-ல் பரப்பளவு 15.29 ஏக்கர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டதற்கு திட்ட அனுமதி வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை:

1. மனுதாரர் திரு.A.செந்தில்குமார், மற்றும் V.முருகன் என்பவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.01.11.2018.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.24017/2018/எல்ஏ1. நாள்.18.06.2019.
3. அரசாணை எண்.134, ஊராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.09.2002.
4. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14619/ 1988-பிசிசி, நாள்.27.04.1988
5. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40483/ 1990/எல்ஏ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007.
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண.12544/2014/சிபி, நாள்.04.07.2014.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண.12201/2017/சிபி, நாள்.28.09.2017.
10. வட்டார வளர்ச்சி அலுவலர், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1874/2019/ஆ3, நாள்.30.04.2019
11. 86-வது காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழும தீர்மானம் எண்.3, நாள்.27.08.2019.
12. உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், அவர்களின் கடிதம் இதே எண் நாள்.19.09.2019.
13. மனுதாரர் திரு.செந்தில்குமார், என்பவர் கடிதம் நாள்.10.10.2019.
14. வட்டார வளர்ச்சி அலுவலர் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் கடிதம் ந.க.எண்.1874/19 ஆ3 நாள்.20.07.2019.

********

..2

NOTARY PUBLIC
D. KARUPPIAH
Reg No : 3575/2013
CHENNAI-50
GOVT. OF INDIA

1. காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழும பகுதி - காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - கீழ்கதிர்பூர் மதுரா குண்டுகுளம் கிராமம். சர்வே எண். **229/2,3,4A,4C, 230/2,3, 231/1,2,3, 232/1,2,3, 233/2,3,4,5, 235/1,2,3**-ல் பரப்பளவு 15.29 ஏக்கர் இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு பார்வை 2-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் கடிதத்தில் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு வரைபடத்திற்கு **ம வ / ந ஊ இ.எண்.21/2019** என எண்ணிடப்பட்டு பெறப்பட்டுள்ளது.

2. பார்வை 11-ல் காணும் காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழும 86-வது கூட்டத்தில் பொருள் எண்.3-ல் தீர்மானம் பெறப்பட்டதை தொடர்ந்து பார்வை 12-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் வளர்ச்சிக் கட்டணம் செலுத்த கோரியது பார்வை 13-ல் கண்ட மனுதாரர் கடிதத்தில் வளர்ச்சிக் கட்டணம் ரூ.3,10,000 (ரூபாய் மூன்று இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது. எனவே இம்மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி <u>**தி அ / கா. உ தி . கு .எண்.8/2019**</u> என எண்ணிடப்படுகிறது.

3. மேலும் பார்வை 4, 5, 6 மற்றும் 7-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. பார்வை 3-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றும். சாலைகள், குடிநீர். தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை நகராட்சிக்கு ஒப்படைத்த பின்னரும். மேலும் மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும். இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ). 19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சிக்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.134, MAWS dated:20.09.2002. , and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.

7. பார்வை 10-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு உள்ளாட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புலஉட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

8. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

9. உள்ளாட்சின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

NOTARY PUBLIC
P. KARUPPIAH
Reg No : 5575/2013
CHENNAI -50
GOVT. OF INDIA

343



சிறப்பு நிபந்தனை

1. மனைப்பிரிவில் தார்சாலைகள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவிற்கு தேவையான பாலங்கள், சாக்கடை, வடிகால் துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் உள்ளாட்சியால் உறுதி செய்யப்பட வேண்டும்.
2. நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்த்துறையில் சர்வே எண்கள் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.
3. பார்வை 7-ல் கட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12544/2014/சிபி. நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

4. பார்வை 8-ல் கட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12201/17/சிபி, நாள்.28.09.2017-ன்படி "The Tamil Nadu Government in G.O.Ms.No.112. Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or Part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority". .

NOTARY PUBLIC
P. KARUPPIAH
Reg No: 5575/2013
CHENNAI -50
GOVT. OF INDIA

மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்க தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மேற்படி கடிதம் மற்றும் வரைபடம் நிபந்தனைகளுடன் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகை சான்று வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

12/11/19

உறுப்பினர் செயலர் (பொ)
காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம்
காஞ்சிபுரம்.

12/11/19

இணைப்பு
மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் (3 நகல்கள்)

<u>நகல்</u>

1. திரு.A.செந்தில் குமார் மற்றும் V.முருகன்.
   எண்.610, சரவணா நகர், வேளிங்கப்பட்டரை.
   காஞ்சிபுரம் - 631 502.

NOTARY PUBLIC
KARUPPIAH
Reg No : 5575/2013
CHENNAI -50
GOVT. OF INDIA



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We’re honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate